بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுஅல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 07/01/2022 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**வக்ஃபே ஜதீத் சந்தாவின் 65 ஆம் ஆண்டுக்கான அறிவிப்பு**

**உலகில் பல்வேறு நாடுகளில் வசிக்கக் கூடிய அஹ்மதிகள், வக்ஃபே ஜதீத் சந்தாவுக்காக கொடுத்த பொருள் தியாகங்களின் ஈமானை வலுப்படுத்தும் சம்பவங்கள்**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ ـ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ ـ

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

وَمَثَلُ الَّذِیۡنَ یُنۡفِقُوۡنَ اَمۡوَالَہُمُ ابۡتِغَآءَ مَرۡضَاتِ اللّٰہِ وَتَثۡبِیۡتًا مِّنۡ اَنۡفُسِہِمۡ کَمَثَلِ جَنَّۃٍۭ بِرَبۡوَۃٍ اَصَابَہَا وَابِلٌ فَاٰتَتۡ اُکُلَہَا ضِعۡفَیۡنِ ۚ فَاِنۡ لَّمۡ یُصِبۡہَا وَابِلٌ فَطَلٌّ ؕ وَاللّٰہُ بِمَا تَعۡمَلُوۡنَ بَصِیۡرٌ ﴿﴾ **(திருக்குர்ஆன் 2: 266)**

இந்த வசனங்களின் பொருள் இதுவாகும்: “தங்களுடைய செல்வங்களை அல்லாஹ்வின் திருப்திகளைப் பெறவும், தங்களைத் தாங்களே உறுதிப்படுத்திக் கொள்ளவும் செலவு செய்பவர்களின் உதாரணம், உயரமான ஓர் இடத்திலுள்ள ஒரு தோட்டத்திற்கு ஒப்பானது. அதன் மீது பெருமழை பொழிகின்ற போது, அது தனது கனியை இரு மடங்காகத் தருகின்றது. மேலும் அதன்மீது பெருமழை பெய்யவில்லையாயினும், பனித்துளிகள் விழுந்தாலும் அதுவே அதற்குப் போதுமானது. நீங்கள் செய்து கொண்டிருப்பதை அல்லாஹ் நன்கு பார்த்துக் கொண்டிருக்கின்றான்.”

நம்பிக்கை கொண்டவர்கள் அல்லாஹ்வின் கட்டளைக்கிணங்க அல்லாஹ்வின் வழியில் எதற்காக செலவழிக்கின்றனர் என்றால், அல்லாஹ்வுடைய விருப்பத்தையும் திருப்தியையும் பெறக் கூடியவர்களாக ஆவது மட்டுமின்றி தனது சமுதாயத்தையும் தனது இயக்கத்தையும் உறுதிப்படுத்த வேண்டும் எனவும் விரும்புகின்றனர். இக்காலத்தில் இஸ்லாமிய போதனையை, இஸ்லாமிய தப்லீக்கை பரப்பக்கூடிய பணி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் அன்னாரை ஏற்றுக்கொண்டவர்களுடைய கடமை என்னவென்றால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மிஷனை பூர்த்தி செய்வதற்கு உயிர், செல்வம் மற்றும் நேரத்தை தியாகம் செய்யவேண்டும். அனைத்து நபிமார்களும் தம்மை ஏற்றுக்கொண்ட மக்களிடம் பொருள் தியாகம் செய்யுமாறு வலியுறுத்தி வந்துள்ளார்கள். **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் இவ்வாறு கூறியுள்ளார்கள்:** ‘நம்பிக்கையாளர் நிச்சயமாக மார்க்கத்திற்காக பொருள் தியாகங்கள் செய்கின்றார். அந்த தியாகங்களுடைய நோக்கம் நம்முடைய இறைவன் எவ்வகையிலாவது நம்மிடம் திருப்திக்கொள்ள வேண்டும்; நம்முடைய நஃப்ஸ்

உறுதிபெற வேண்டும்; நம்முடைய ஈமானும் நம்பிக்கையும் உறுதி பெற வேண்டும் என்பதே!’

இந்த வசனத்தில் அல்லாஹ்வுக்காக செலவழிக்கக் கூடியவர்களுடைய உதாரணம் இருவகையாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஒன்று وَابِلٌ அதாவது, பெரிய துளிகளைக் கொண்ட கடுமையான மழையைப் போன்றதாகும். இரண்டாவது طَلٌّ அதாவது, பலவீனமான மென்மையான மழை; சாரல் அல்லது பனித்துளியைப் போன்றது. அதிக செல்வவளம் கொண்ட மனிதர் மார்க்கத்திற்காக அதிகமாக செலவழிக்க இயலும். ஆனால் ஏழை மனிதரோ, நான் எவ்வாறு அந்த செல்வந்தருக்கு நிகராக ஆக முடியும்? என்று வருத்தப்படுகிறார். இந்த சிந்தனை அந்த ஏழையிடத்தில் தோன்ற முடியும்!

ஆனால், தியாகங்களின் பிரதிபலனை அல்லாஹ்தான் தருகின்றான். அல்லாஹ் உங்களுடைய நிலைகளையும் உங்களுடைய எண்ணங்களையும் அறிவான். ஆகவே அவன் உங்களுடைய சிறிய தியாகங்களையும் கூட பல மடங்காக அதிகரித்து அவன் பிரதிபலனை வழங்குகின்றான்.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார்கள்:** ‘இன்று ஒரு திர்ஹம் ஒரு லட்சம் திர்ஹமை முந்தி விட்டது.’ சஹாபிகள் இதைக்குறித்து வினவியபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘ஒரு நபர் தன்னிடம் இருந்த இரண்டு திர்ஹம்களில் ஒன்றை தியாகம் செய்தார். அதே போன்று இன்னொரு நபர் தன்னிடம் இருந்த எண்ணிக்கையிலடங்கா செல்வத்திலிருந்து ஒரு லட்சம் திர்ஹம் தியாகம் செய்தார். இது அவருடைய செல்வத்தை பொறுத்தவரை மிகவும் குறைவான தொகை ஆகும்.’

ஆக, அல்லாஹ் எண்ணங்களுக்கான பிரதிபலனை வழங்குகின்றான். நமது ஒவ்வொரு செயலின் மீதும் அல்லாஹ்வின் பார்வை இருக்கின்றது. நமது ஒவ்வொரு வேலையும் அல்லாஹ்வுடைய விருப்பத்திற்காக இருக்கும் என்றால், அப்பொழுதுதான் நாம் அல்லாஹ்வுடைய அருள்களுக்கு உண்மையான வாரிசாக ஆகமுடியும்!

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தில் அன்னாரை ஏற்றுக்கொண்ட பெரும்பாலான மக்கள் ஏழைகளாக இருந்தனர். அவர்கள் தியாகங்களில் எந்த அளவு முன்னேறி இருந்தனர் என்றால் ஒரு சந்தர்ப்பத்தில் **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:**

“நம்முடைய ஜமாஅத்தில் இணைந்த நூற்றுக்கணக்கான மக்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கின்றனர் என்றால், அவர்களுடைய உடலில் ஆடை இருப்பதே பெரும் விஷயமாக இருக்கின்றது! போர்வையோ அல்லது கீழாடையோ மிகவும் கஷ்டப்பட்டுதான் அவர்களுக்கு கிடைக்கின்றது. அவர்களிடத்தில் எந்த சொத்தும் இருப்பதில்லை. ஆனால் அவர்களுடைய தூய்மையையும், நோக்கத்தையும், நேசத்தையும், நன்றி உணர்வையும், ஈமானுடைய பேரார்வத்தையும் காணும்போது சுயமே நமக்கும் வியப்பு மற்றும் ஆச்சரியம் தோன்றுகிறது! எந்த அளவுக்கு என்றால் எதிரிகளும் வியப்படைந்துள்ளனர்.”

ஆகவே நன்றியுணர்வு, கலப்பற்ற தன்மையில் முன்னேற்றம் மற்றும் ஈமானிய பேரார்வத்தில் அசாதாரண தரம் ஆகியவற்றினுடைய செயல் வெளிப்பாடுகள் இன்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்திலுள்ள நபர்களிடத்தில் தென்படுகின்றது. புதிய அஹ்மதிகள் கூட இந்த

கொஞ்ச காலத்திலேயே எந்தஅளவுக்கு முன்னேற்றம் அடைந்து விட்டார்கள் என்றால், எதிரிகளும் கூட அந்த மாற்றத்தைக்கண்டு வியப்பில் உள்ளனர்.

நல்ல இயல்பு, நல்ல பண்பு, பைஅத்துடைய உரிமையை செலுத்திய வெளிப்பாடு மற்றும் காலத்தின் கலீஃபாவுடன் நன்றி உணர்வின் தொடர்பை வெளிப்படுத்துவது ஆகியவை பொருள் தியாகம் செய்த அந்த மக்களுடைய சொல்லிலும் செயலிலும் வெளிப்பட்டுக் கொண்டே இருக்கின்றது. இவர்கள் அல்லாஹ்வுடைய வழியில் செலவு செய்து, அல்லாஹ்வுடைய விருப்பத்தை பெறக்கூடிய வழிமுறை பற்றிய புரிதலை பெற்றுக் கொண்டு ஒருவரையொருவர் முந்துவதற்கு முயற்சி செய்கின்றனர்.

இறை வாக்குறுதிக்கேற்ப ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த ஜமாஅத் தோற்றுவிக்கப்பட்டதன் நோக்கமே, இது மலர்ந்து வளர்ந்து முன்னேற வேண்டும் என்பதற்காகவே. எதிரி இதற்கு எந்த ஒரு நஷ்டத்தையும் ஏற்படுத்த இயலாது.

*ஹுஸூர் அவர்கள், சியேரா லியோன் (sierra leone), சாட் (Chad), டோகோ (togo), பெலீஸ் (belize), கினி கொனாகிரி (Guinea-Conakry), கேம்பியா, ஜெர்மனி, பிரிட்டன், இந்தியா, மாலி, போலந்து, தன்சானியா, ஐவரிகோஸ்ட், கேமரூன், கானா ஆகிய நாடுகளில் உள்ள ஜமாஅத் உறுப்பினர்கள் பொருள் தியாகம் செய்து தமது ஈமான் மற்றும் திட உறுதியை வெளிப்படுத்தி, அல்லாஹ்வின் சார்பாக அவர்களின் ஈமான் உறுதிபெற்ற சம்பவங்களைப் பற்றியும் ஈமானை வலுப்படுத்தும் சில சம்பவங்களைப் பற்றியும் எடுத்துரைத்தவாறு கூறினார்கள்:*

அல்லாஹ் உடனடியாக வழங்கிய ஒரு சம்பவத்தைப் பாருங்கள்! இது, இந்தியாவில் யாத்கீர் எனும் ஜமாஅத்தில் நிகழ்ந்த சம்பவமாகும். வக்ஃபே ஜதீதுடைய நிதியாண்டு முடிவடையும் தருவாயில் இன்ஸ்பெக்டர் சாஹிப் ஒரு காதிமை சந்தித்து வக்ஃபே ஜதீது சந்தா செலுத்துவது குறித்து பேசினார். அப்போது அந்த காதிம் கூறினார்: இப்போது என்னுடைய பாக்கெட்டில் 1,500 ரூபாய் மட்டுமே உள்ளது. அதை நான் ஒருவருக்கு கொடுக்க வைத்துள்ளேன். அவருக்கு கொடுக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். இப்போது நான் தங்களுக்கு சந்தா கொடுத்தால் அந்த நபருக்கு பணத்தை எவ்வாறு கொடுப்பது? தற்போது உடனடியாக மேற்கொண்டு பணத்திற்கான ஏற்பாடு செய்வது சாத்தியமில்லாததாகும். எவ்வாறிருப்பினும், அவர் அந்த 1,500 ரூபாயை சந்தாவுக்காக கொடுத்து விட்டார்.

அடுத்த நாளில் இன்ஸ்பெக்டர் சாஹிப் அவர்கள் வக்ஃபே ஜதீது செக்ரடரியுடன் அந்த காதிமை சந்திப்பதற்காக அவருடைய கடைக்கு சென்றபோது, அந்த காதிம் தன்னுடைய பாக்கெட்டில் இருந்து பணத்தை எடுத்து வைத்துக் கொண்டே சென்றார். அங்கு ஒரு பணக் குவியலே வந்துவிட்டது. அந்த காதிம் கூறினார்: நேற்று நான் சந்தா கொடுத்து விட்டு வீட்டுக்கு சென்றபோது, எனக்கு பல்வேறு இடங்களில் இருந்து பணம் வர ஆரம்பித்தது. பல ஆயிரக்கணக்கான ரூபாய்கள் தற்போது என்னிடம் வந்து விட்டது. அவை முன்பு வராமல் தடைப்பட்டிருந்தன. மக்கள் எனக்கு கொடுக்க வேண்டிய பணமாக அவை இருந்தன.

ஆக, இவ்வாறு அல்லாஹ் அருள் வழங்கினான்.

பிறகு, செல்வந்தர்கள் செய்கின்ற தியாகத்தையும் பாருங்கள்! உலகின் பார்வையில் அவர்கள் பெரும் செல்வந்தர்களாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் ஜமாஅத்தின் பார்வையில் செல்வந்தராக உள்ள, கருளாயி ஜமாஅத்தை சார்ந்த ஒரு நபருடைய சம்பவம். அவர் பத்து லட்சம் ரூபாய் சந்தாவாக கொடுத்திருந்தார். அவருடைய மனைவி கிறிஸ்தவத்திலிருந்து அஹ்மதியத்திற்கு வந்திருந்தார்.

துஆக்கள் மற்றும் தொழுகைகளில் மிக ஆர்வம் உடையவராகவும் கலப்பற்ற பெண்மணியாகவும் இருந்தார். அத்துடன் கணவன் மனைவி இருவரும் வஸிய்யத்தும் செய்திருந்தனர். இந்த சம்பவம் இவ்வாறு எடுத்துரைக்கப்படுகிறது: நாங்கள் அவருடைய வீட்டுக்கு சென்றிருந்தோம். அவருடைய மனைவி 5 லட்ச ரூபாய்க்கான காசோலையை கொடுத்தார். இதைக் கண்ட இன்ஸ்பெக்டர், உங்களுடைய கணவர் ஏற்கனவே 10 லட்ச ரூபாய் கொடுத்திருக்கிறார். தற்போது நீங்களும் தருகிறீர்களே! என்று கேட்டதற்கு அந்தப் பெண்மணி கூறிய பதில் என்னவென்றால், ‘எங்களுக்கு கிடைத்த அருள்கள் எல்லாம் சந்தாக்களின் அருள்களேயாகும். ஆகவே மீண்டும் மீண்டும் சந்தா கொடுக்க வேண்டுமென்று உள்ளம் நாடுகிறது. இந்த அருளினாலேயே எங்களுடைய வியாபாரம் மேம்படுகிறது. ஆகவே நாங்கள் சந்தா கொடுப்பதை விட்டு ஒருபோதும் பின்வாங்க மாட்டோம்.’

தியாகத்தின் தரம் ஆண்கள், பெண்கள் மற்றும் பெரியவர்கள் ஆகியோரிடம் மட்டுமின்றி இளமைப்பருவத்தில் கால் எடுத்து வைக்கக்கூடிய குழந்தைகளிடத்திலும் காணப்படுகிறது. அல்லாஹ்வின் அருளால் பெரும் பெரும் தூயவர்கள் ஜமாஅத்தில் தோன்றுகிறார்கள்.

கடந்த வருடம் அல்லாஹ் நம்முடைய ஜமாஅத்துக்கு 187 பள்ளிவாசல்களை கட்டக்கூடிய நல்வாய்ப்பை வழங்கினான். அதுமட்டுமின்றி ஆப்ரிக்காவில் 105 பள்ளிவாசல்கள் கட்டப்பட்டு வருகின்றன. இவ்வாறே 144 மிஷன் ஹவுஸ்கள் கட்டப்பட்டுள்ளன. அவற்றில் அநேக மிஷன் ஹவுஸ்கள் ஆப்பிரிக்காவில் கட்டப்பட்டுள்ளன. மேலும் 45 மிஷன் ஹவுஸ்கள் கட்டப்பட்டு வருகின்றன. இவைகளைத் தவிர, எங்கு உடனடியாக மிஷன் ஹவுஸை கட்ட இயலாதோ அங்கு வாடகைக்கு கட்டடங்கள் எடுக்கப்படுகின்றன. ஆப்ரிக்க நாடுகளில் 731 மிஷன் ஹவுஸ்களும், ஆசிய நாடுகளில் 632 மிஷன் ஹவுஸ்கள் வாடகைக்கு எடுக்கப்பட்டுள்ளன.

அல்லாஹ் உண்மையான வாக்குறுதிகளை வழங்கக் கூடியவனாக இருக்கின்றான். அவன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் செய்த தனது வாக்குறுதிகளை நிறைவேற்றி வருகின்றான். அத்துடன் மறைவிலிருந்து உதவியும் செய்கின்றான்; உதவியும் செய்து வருவான் இன்ஷா அல்லாஹ்! அவனுடைய விருப்பத்தை பெறுவதற்காக அவனுடைய வழியில் செலவு செய்வதற்கு அல்லாஹ் நமக்கு சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்கின்றான். அதன்மூலமாக அல்லாஹ்வுடைய அருளுக்கு நாம் வாரிசாகலாம். அல்லாஹ்வுடைய அருளை ஈர்க்கக் கூடியவர்களாக ஆவதற்கு அல்லாஹ் நமக்கு நல்வாய்ப்பு வழங்குவானாக!

*ஹுஸூர் அவர்கள், 2022 ஜனவரி முதல் வக்ஃபே ஜதீதுடைய புதிய நிதியாண்டு துவங்கியது குறித்து அறிவிப்பு செய்தவாறு கூறினார்கள்:* கடந்த 2021 ஆம் ஆண்டு வக்ஃபே ஜதீதுடைய 64 ஆவது நிதியாண்டாகும். அதில் ஜமாஅத், வக்ஃபே ஜதீதுக்காக செய்துள்ள தியாகம் ஒரு கோடியே 12 லட்சத்து 77 ஆயிரம் பவுண்டு ஆகும். 2020 ஆம் வருடத்தை விட இந்த தியாகம் 7 லட்சத்து 42 ஆயிரம் பவுண்டு அதிகமாகும். கலந்து கொள்ளக்கூடியவர்களின் எண்ணிக்கையும் 14,45,000 ஆகும். உலகின் பொருளாதார நிலையைப் பார்க்கும்போது அல்லாஹ்வின் மிகப்பெரும் அருள் கிடைத்துள்ளது என்றே கூறலாம்.

பாகிஸ்தானுடைய கரன்சி வீழ்ச்சியின் காரணமாக அதனுடைய தரவரிசை மிகவும் கீழே சென்று விட்டாலும் அவர்கள் தமது சக்தியை விட மிக அதிகமாகவே தியாகம் செய்கின்றனர்.

*அதன் பிறகு ஹுஸூர் அவர்கள் உலகின் பல்வேறு ஜமாஅத்துகளின் தரவரிசையை குறிப்பிட்டார்கள். அவை பின்வருவன;*

**ஒட்டு மொத்த வசூலின் அடிப்படையில்** பிரிட்டன் முதலிடத்தில் உள்ளது. பிறகு ஜெர்மனி, கனடா, அமெரிக்கா, இந்தியா, ஆஸ்திரேலியா, இந்தோனேஷியா, மத்திய கிழக்கைச் சேர்ந்த ஒரு ஜமாஅத், கானா, பெல்ஜியம்.

**தனிப்பட்ட நபருடைய சந்தாவைப் பொறுத்தவரை** அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. பிறகு சுவிட்சர்லாந்து, பிறகு பிரிட்டன்.

**இந்தியாவின் முதல் பத்து மாநிலங்கள்:** கேரளா, ஜம்மு காஷ்மீர், தமிழ்நாடு, தெலுங்கானா, கர்நாடகா, ஒடீஷா, பஞ்சாப், மேற்கு வங்காளம், தில்லி, மஹாராஷ்டிரா.

**வசூல் அடிப்படையில் இந்தியாவின் முதல் பத்து ஜமாஅத்துகள்:** ஹைதராபாத், காதியான், கருளாயி, பத்தப்பிரியம், கோயம்புத்தூர் பெங்களூர், கொல்கத்தா, கோழிக்கோடு, ரிஷிநகர், மேலப்பாளையம்.

தியாகம் செய்த அனைவருடைய செல்வத்திலும், உயிரிலும் அல்லாஹ் அளவற்ற அருளை வழங்குவானாக!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ الله رحمكم الله اِنَّ اللهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)**